

குறள் வெண்பா நூல்-ரு.

தினகரமாலை என்னும்

தினகர வெண்பா

முன்னுரை

தென்தமிழ் நாட்டுச் செம்பொருட்டுணிவின் சீரெலாம் விளக்கும் தெய்வப் பொதுமறை திருவள்ளுவ நாயனர் திருவாய் மலர்ந்தருளிய திருக்குறளாகும். இந்நாளின் அம் மறை உலகப் பொதுமறையாக நிலவுகின்றது. அவர் ஓதிய பொருளேயன்றி மொழியினையும் பொன்னேபோற் போற்ருத தமிழ் நூல்கள் இல்லை.

மேலும் அவர்தம் முழுக்குறளையும் தங்கள் கருத் துக்கு எடுத்துக்காட்டாக அப்படியே அமைத்து வெளி வந்து நிலவும் நூல்களும் அளவில. அவற்றுள் ஒன்று இத்"தினகர வெண்பா"வாகும். இந்நூலாசிரியரின் பெயர் முதலிய வரலாறுகள் ஏதும் புலனுகவில்லை பாட்டுடைத் தலைவராகிய "தினகரபிள்ளை" என்னும் செம்மலின் வரலாறு இந்நூலாலும், கல்லெழுத்தாலும் சிறிது புலனுகின்றது அது வருமாறு:

இவர் தொண்டை நாட்டுக் கோவை நகரினராவர் கருணிகர் குலத்தினர்; வீரையன் என்பவரின் மைந்தர்; சைவச் செந்நெறியினர்; வண்டமிழ் அறிந்த பெருவள்ளல். "அச்சுதேந்திரன்" என்னும் மன்னனின் மதி அமைச்சர். மாவை நகர் "உத்தண்டன்" என்பவரின் உணர்ச்சியொத்த நண்பர். கோவையென்பது கோவூர். இவ்வூர் சேக்கிழார் பெம்மான் திருத் தோற்றமுற்றருளிய குன்றத்தூரையடுத் துள்ளது. முன்னளில் இவ்வூர் மிகச் சிறந்ததாக இருந்தமை "கோவூர்முன் காட்டிய பின்குன்றத் தூர்வழி கூட்டியப்பால் நாவூர்நுங் காஞ்சி புரங்காட் டுதல் தொண்டை நாட்டியல்பே" என்னும் அமிர்த கவிராயரது ஒரு துறைக் கோவை யடிக்கண் ணுணரப்படும்.

திருமழிசை கல்லெழுத்து வருமாறு: "அச்சுதப்ப நாயக்கரையன் காரியத்துக்குக் கர்த்தரான தினகர பிள்ளையவர்கள்" எனக் காணப்படுகின்றது. இது விசய நகரத்து அரசரான இராமராஜ வேங்கடபதி ராஜய்ய தேவ மகாராயர் காலத்தில் ஜயஹு மாசி 18ஆம் தேதி, திருவாதிரை நட்சத்திரமும் சோமவாரமும் பெற்ற தினத்தன்று பொறிக்கப்பட்டது. விஜய நகரவரசருடைய ஆதிபத்தியத்தின் கீழ்த் தஞ்சையில் அரசு புரிந்த நாயக்க வமிசத்தினருள் ஒருவரே கல்லெழுத்திலும் இந்நூலினும் கூறப்படும் அச்சுதப்பர். ஆகவே இவர் காலமாகிய கி. பி. 16ஆம் நூற்றுண்டிறுதியில் இந்நூல் இயற்றப்பட்டதாகலாம்.

இந்நூலாசிரியரும் பாட்டுடைத் தலைவரும் சைவச் செந்நெறியினராவர். பாட்டுக்கள் எளிமையும் இனிமையும் ஆற்றெழுக்கும் அமைந்தன. பொருத்தமான கதைகள் இயைக்கப்பட்டுள்ளன. அதிகாரத்துக் கொவ்வொன்றுக கஙஉ காட்டுக்களும் கூடுதலாகக், காப்பு, புதல்வரைப் பெறுதல், புகழ், நட்பு என்பவற்றால் நான்கும் ஆக கஙள அமைந்துள்ளன. குறிப்புரையுடன் வெளிவருகிறது. இதுவும் இது போன்ற நூல்களும் கற்பதால் கற்பார்க்குத் திருக்குறளின் பயிற்சியும் விளக்கமும் மிக்குண்டாகும். அதனல் அனைவர்க்கும் இந்நூல் மிக்க பயனுடையதாகும்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உ

திருச்சிற்றம்பலம்

தினகரமாலை என்னும்

தினகர வெண்பா

காப்பு

முன்பாதி புன்சொல் முழுத்தமிழ் பின்பாதி
யின்பாந் தினகரனை யிங்கிதஞ்செ—யென்பாவில்
வள்ளுவர்வெண் பாக்குறளை வைப்பதனாற் குற்றமெல்லாந்
தள்ளுவரே யானைமுகர் தாம். 1

1. அறத்துப்பால்

கடவுள் வாழ்த்து

உத்தமநூல் கற்று முமாபதிக்கன் பில்லாத
சித்தருனக் கொவ்வார் தினகரா—எத்தனையுங்
கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றா டொழாஅ ரெனின். 2

வான்சிறப்பு

என்றுமுகி லைத்தொழுவா ரிங்குனக்குத் தோற்றிளம்புற்
சென்றுகவ்வு மொன்னார் தினகரா—நின்று
விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது. 3

நீத்தார் பெருமை

தக்கெடி[1] மன்னவர்நீ தான்சினக்கி லக்கணமே
திக்குவிடப் போவார் தினகரா—ஒக்குங்
குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது. 4

(பாடம்) : [1] தக்க கொடி.

அறன்வலியுறுத்தல்

வையகத்தில் வாழு மனிதரெல்லா[1] நல்லவறஞ்
செய்வதுவே நன்மை தினகரா—துய்ய
அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை. 5

இல்வாழ்க்கை

என்போ டுருகுதவ மேதுக்கா மைந்தரொடுந்
தென்கோவை வாழுந் தினகரா—உன்போல்
இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை. 6

வாழ்க்கைத் துணைநலம்

இப்புவிமேற் பெண்ணச்[2] செடுப்பதெல்லாம் பாவமென்று
செப்புவர்காண் கோவைத் தினகரா—அப்படியேன்
பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின். 7

புதல்வரைப்பெறுதல்

மைந்தரை நீபெற்றாய் மைந்தர்நடை கற்குமுன்னே
செந்தமிழைக் கற்றார்[3] தினகரா—முந்தப்
பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற. 8

புத்திரரோ டுண்ணாத போசனமும் போசனமோ
சித்தருணா கோவைத் தினகரா—நித்தம்
அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ். 9

அன்புடைமை

இவ்வாழி மண்டலத்தன் பில்லார்க்குன் செங்கோலே
செவ்வாழி[4] கண்டாய் தினகரா—ஒவ்வாதென்
என்பி லதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம். 10

(பாடம்): [1] மனுடரெல்லா. [2] பெண்பேச் [3] செந்தமிழைப் பெற்றார். [4] செவ்வாளி.

விருந்தோம்பல்

நல்ல குணமு நகைமுகமு மில்லார்பாற்[1]
செல்ல லரிதே தினகரா—மெல்லவே
மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. 11

இனியவை கூறல்

கொய்யுளேவே மும்பொன் கொடுப்பதிலு மின்சொலுரை
செய்வதுவே நன்மை தினகரா—பைய
அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின். 12

செய்ந்நன்றியறிதல்

புந்திசெய்ய நன்மையே பொல்லாங் கினைச்சிறிதுஞ்
சிந்தைசெய்ய[2] லாமோ தினகரா—சந்ததமும்
நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று 13

நடுவுநிலைமை

ஏந்துமுலை மின்னார்க் கிடைநடுவு நின்றமையாற்
றேய்ந்து மழகாந் தினகரா—போந்த[3]
கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் றாழ்வு. 14

அடக்கமுடைமை

நல்வசனஞ் சொல்லி நயந்தோர் தமைவணங்கல
செல்வ முனக்கே தினகரா—அல்லவோ
எல்லார்க்கு நன்றாம் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து. 15

ஒழுக்கமுடைமை

நாகரிக ராணுலென் நற்குலத்த[4] ராணுலென்
சீகருண கோவைத் தினகரா—ஆகும்
ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும். 16

(பாடம்) [1]மில்லவர்பார் [2] சிந்தை செய [3] போந்து [4] நற்குணத்த.

பிறனில்விழையாமை

நொய்துகொண்டு வாசவன்மெய் நூறு யிரம்பழுது
செய்துகொண்டான் கோவைத் தினகரா—எய்தல்
எளிதெென வில்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி. 17

பொறையுடைமை

ஆர்க்கும் பொறுமை யழகியதே யாகாது[1]
தீர்க்க வயிரந் தினகரா—பார்க்குள்
ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். 18

அழுக்காறாமை

மாசுடையார் வாழ்வுமொரு வாழ்வோ மணிவயிரத்
தேசுடைய கோவைத் தினகரா—பேசுங்கால்
அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும். 19

வெஃகாமை

நாணுசை கொண்டிருக்க நாணுப் பரத்தையர்வாய்த்
தேனுசை கொண்டாய் தினகரா—ஆனாலுஞ்
சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர். 20

புறங்கூறாமை

ஏதிலார் பொல்லாங் கெடுத்துரைப்பார் தம்முடைய
தீது குறியார் தினகரா—யாதும்
பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்
திறன்றெரிந்து கூறப் படும். 21

பயனிலசொல்லாமை

ஓர்ந்துணர்ந்து கொண்டுபய னுண்டாக வோர்வசனந்
தேர்ந்துசொல்ல வேண்டுந் தினகரா—சேர்ந்த[2]
பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல். 22

(பாடம்) [1] யொன்றுது [2] சோர்ந்த.

தீவினையச்சம்

ஆவலுடன் ஓடி யலைந்து திரிந்தாலுந்
தீவினைதான் போமோ தினகரா—பூவில்
எனைப்பகை யுற்ருரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும். 23

ஒப்புரவறிதல்

இன்ஞ ரினியா ரிவரென்று சற்காரஞ்
செய்ந்நாக ரீகா தினகரா—பொன்னுன
புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
யொப்புரவி னல்ல பிற. 24

ஈகை

மானிடர்க்கு ளுன்போல் வரையாத் தியாகமற்றைத்
தினரிடத் துண்டோ தினகரா—தேனே[1]
இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள. 25

புகழ்

கையாற் பரிந்தழைக்கக் கண்டுகுமுந் தைச்சோமன்
செய்யசுட்டி யீந்தான் றினகரா—வையத்துத்
தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றேன்ருமை நன்று. 26

கல்விக் கடல்கடந்து[2] கற்றறிவு பேசுமவர்
செல்விக்கப் போற்றுந் தினகரா—சொல்லில்
வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர். 27

அருளுடைமை

வாடினர்க்குச் சற்றுமருள் வைத்திலார்[3] மாநிதியந்
தேடினக்கா லென்னுந் தினகரா—நாடில்
அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள. 28

(பாடம்) [1] ஏனே [2] கரை கடந்துங் [3] சற்று மருள்வதிலார்.

புலால் மறுத்தல்

மன்னுயிரைத் தாமாய் வதையாமற் கொண்டுபுலால்
தின்னலா மென்பார் தினகரா—என்னே
தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில். 29

தவம்

தாமதத்தி லன்றிநினைந் தாற்போ லிருந்திடத்தே
சிமைபெற்ருய் கோவைத் தினகரா—ஆமெவர்க்கும்
வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும். 30

கூடாவொழுக்கம்

ஒப்போ டொழுகா ருளந்திறந்து பார்க்கவது
செப்போ சிமிழோ தினகரா—இப்பாற்
கணைகொடிதி யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல். 31

கள்ளாமை

கள்ளர்க்குற் ருருண்டோ[1] கற்ருேர் தமிழையெல்லாந்
தெள்ளிப் புனையுந் தினகரா—உள்ளும்
அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு. 32

வாய்மை

விப்பிரர்தெய் வங்குரவர் வேண்டுநிலைக் காயொருபொய்
செப்பினுநன் ருகுந் தினகரா—ஒப்புரைகேள்
பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின். 33

வெகுளாமை

ஆரா ருறவாகா ரார்வசமா கார்சினத்தைச்
சேரா திருக்கிற் றினகரா—நேராக
உள்ளிய தெல்லா முடனெய்து முள்ளத்தா
னுள்ளான் வெகுளி யெனின். 34

(பாடம்) [1] கள்ளற் குறவுண்டோ.

இன்னுசெய்யாமை

குற்றமிகச் செய்தாரைக் கொல்லாமற் கொல்லவொரு
சிற்றறிவா ளுண்டே தினகரா—உற்றதுகேள்
இன்னுசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல். 35

கொல்லாமை

எய்துசிவ பூசை யிருக்கப் பசுப்படுத்துச்
செய்துபல னென்ன தினகரா—செய்தழலின்[1]
நன்ருகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்ருேர்க்குக்
கொன்ருகு மாக்கம் கடை. 36

நிலையாமை

பூசிமுடித் துண்டுடுத்துப் பொன்னுளபோ தேகொடுத்துத்
தேசுபெற வேண்டுந் தினகரா—பேசுங்காற்
கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று 37

துறவு

ஆரே வெறுப்பவ ராரநரை வந்தபின்பு
தீர வெறுப்பார் தினகரா—பேரருளே
வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபி
னீண்டியற் பால பல. 38

மெய்யுணர்தல்

சைவநிலை நின்றுஞ் சமயபே தங்களிலே
செய்வதுண ராரென் தினகரா—எவ்வுரையில்
எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 39

அவாவறுத்தல்

பேதையர்க்கு மோகம் பிறப்பியா தேவிடுமோ
சீதரனே கோவைத் தினகரா—காதல்
அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து. 40

(பாடம்) [1] பெய்தழலின் [2] காசினியிற்.

ஊழ்

ஒன்று மறியா ருலகாள்வா ரொள்ளியர்கள்
சென்றிரப்பார் கோவைத் தினகரா—அன்றே
இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு. 41

அறத்துப்பால் முற்றும்

---

2. பொருட்பால்

இறைமாட்சி

மன்னர்க்குச் சீமை வளம்பெறவென் றுலெளிதோ
செந்நெல்சேர் கோவைத் தினகரா—உன்னைப்போற்
காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேன்
மீக்கூறு மன்ன னிலம். 42

கல்வி

எண் ணு மெழுத்துநங் கண்ணென் றியம்பியசொற்[1]
றிண்ணமே யாருந் தினகரா—மண்ணின்மேற்
கண் ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண் ணுடையர் கல்லா தவர். 43

கல்லாமை

கல்லாரு நல்லாரே கற்றோர் சபைநடுவே
செல்லா திருக்கிற் றினகரா—சொல்லின்[2]
விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர். 44

கேள்வி

கற்றிலனே யாயினுங் கேட்க வஃதுஞற்றுஞ்
சிற்றறிவை நீக்குந் தினகரா—முற்றும்
இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல். 45

அறிவுடைமை

ஓதி யறியுமறி வொன்றுமே போதுமிம
சேதுமட்டும் போற்றுந் தினகரா—போத
அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர். 46

(பாடம்) [1] றோதிய [2] பொல்லா.

குற்றங்கடிதல்

ஆரூர்க் குழக்கன்றுக் கன்றோர் குலக்கன்றைத்
தேருருவித்தான் றினகரா—பாருடு
தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி
னென்குற்ற மாகு மிறைக்கு. 47

பெரியாரைத் துணைக்கோடல்

ஆடுபல தேடலா மானமத யானையொன்று
தேட லரிதே தினகரா—நாடில்
அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல். 48

சிற்றினஞ்சேராமை

எய்தரிய புண்ணியவா னென்பதுநின் மைந்தரிலுஞ்
செய்தியிலுங் கண்டோந் தினகரா—பொய்யோ
மனந்தூயார்க் கெச்சநன் றாகு மினந்தூயார்க்
கில்லைநன் றாகா வினை. 49

தெரிந்துசெயல்வகை

ஈதலுமின் சொல்லுநல மென்செய்தா லுஞ்சிலர்க்குத்
தீது வருமே தினகரா—ஆதலினால்
நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை. 50

வலியறிதல்

மெய்யுலகி லொன்றை விசாரியா மற்பதறிச்
செய்யிற்கூ டாதே தினகரா—பைய
வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல். 51

காலமறிதல்

காலங் கருதிக் கருமம் பதறார்கள்
சீலம் பெரியோர் தினகரா—ஞாலம்
பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. 52

இடனறிதல்

ஓரிடத்தி லாற்ற லுடையா ரயலொருவர்
சேரிடத்தி லாற்ருர் தினகரா—வாரி
நெடும்புன லுள் வெல்லு முதலே யடும்புனலி
னீங்கி னதனைப் பிற. 53

தெரிந்துதெளிதல்

யார்யார்க்கு[1] நற்குணமு மல்லாத துர்க்குணமுஞ்
சேரா திராது தினகரா—நேராய்க்
குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். 54

தெரிந்துவினையாடல்

ஏற்பதல்ல வேகுருவி யின்கழுத்தி லேபனங்காய்
சேர்ப்பதென்ன[2] கோவைத் தினகரா—நேர்ப்பாய்[3]
இதனை இதனு லிவன்முடிக்கு மென்ருய்ந்
ததனை யவன்கண் விடல். 55

சுற்றந்தழால்

ஊரார்க்குச் சோறிடுவ ருற்ருரை யண்டையிலுஞ்
சேராத தென்ன தினகரா—காரியமோ
சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன். 56

பொச்சாவாமை

எந்தநெடுஞ் செல்வ மிருந்தாலுஞ் செய்கருமஞ்
சிந்தைமற வாதே தினகரா—அந்திபகல்
அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லைப்
பொச்சாப் புடையார்க்கு நன்கு. 57

செங்கோன்மை

கள்ளரையும்[4] கொல்லுங் கசடரையுந் தண்டித்தல்
தெள்ளிமைகாண் கோவைத் தினகரா—உள்ளங்
கொலேயிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனெடு நேர். 58

(பாடம்) [1] ஆரார்க்கு [2] சேர்க்கும தென் [3] பார்க்கில் [4] படரையுந்-

கொடுங்கோன்மை

வெய்யகொடு வேந்தனென்று[1] வேண்டுமென்றா லாருமென்ன
செய்யலாங் கோவைத் தினகரா—கையிலே
வேலொடு நின்றா னிடுவென் றதுபோலுங்
கோலொடு நின்றா னிரவ. 59

வெருவந்தசெய்யாமை

ஆவ தறியா ரவருக்கு வேறுபகை
தேவையில்லை கோவூர்த் தினகரா—கோவக்
கடுஞ்சொல்லன் கண்ணில னாயி னெடுஞ்செல்வ
நீடின்றி யாங்கே கெடும். 60

கண்ணோட்டம்

ஒன்று தனக்கு முறுப்பில்லா[2] மன்னரெனத்
தின்று கொழுத்தென் தினகரா—என்றுங்
கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை யுடைத்திவ் வுலகு. 61

ஒற்றாடல்

வெல்லுமுடி மன்னவற்கு வேறுமிரு[3] கண்களுண்டு
தில்லைநடம் போற்றுந் தினகரா—சொல்லவோ
ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண். 62

ஊக்கமுடைமை

நிந்திக்கு மற்ப நினைவுகளா லொன்றனையுஞ்
சிந்திக்கொண் ணாது தினகரா—புந்திக்குள்
உள்ளுவ தெல்லா முயர்வுள்ளன் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து. 63

மடியின்மை

உய்யு மனமடிக்க வொண்ணா தொருகருமஞ்
செய்யு மிடத்திற் றினகரா—மையா
மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் னொன்னார்க்
கடிமைபுகுத்தி விடும். 64

(பாடம்) [1] வெய்யகுல மன்னனென்று [2] முறுப்பற்ற [3] வேண்டுமிரு.

ஆள்வினையுடைமை

அய்யிருநூ ருண்டுவிக்ர மார்க்கனுக்குப் பட்டியுந்தான்
தெய்வமுட னிந்தான் றினகரா—மெய்யாக
ஊழையு முப்பக்கங் காண்ப ருலேவின்றித்
தாழா துஞற்று பவர். 65

இடுக்கணழியாமை

ஒரு முலகிடுக்க ணுற்ற பொழுதீசன்
தீரநகை செய்தான் றினகரா—ஆரும்
இடுக்கண் வருங்கா னகுக வதனை
யடுத்தூர்வ தஃதொப்ப தில். 66

அமைச்சு

ஆனகுல மந்திரிநீ யானலு நான்சொலக்கேள்
தேன்மருவுங் கோவைத்[1] தினகரா—தானே
பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு. 67

சொல்வன்மை

நித்தத்து வங்கேட்க நின்றகும்ப கன்னனுக்குச்
சித்தித்த தொன்று தினகரா—அத்தனையோ
ஆக்கமுங் கேடு மதனல் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு. 68

வினைத்தூய்மை

ஈன்றாள் பசிகொண் டிருந்தாலுஞ் சோலையெல்லாந்
தேன்றுவுங் கோவைத் தினகரா—சான்றோருக்
கென்று மொருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை. 69

வினைத்திட்பம்

தப்பாமல் வீடணற்குத் தந்தோ மிலங்கையெனச்
செப்பியது செய்தான் றினகரா—இப்புவிமேற்
சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல். 70

(பாடம்) [1] தேன்மருவுஞ் சோலைத்.

வினைசெயல்வகை

சும்மாதா னென்றைத்[1] துணிந்துசெய்ய வொண்ணாது
செம்மாலை மார்பத் தினகரா—தம்மால்
முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல். 71

தூது

அன்றெதிரி செய்தவினைக் கஞ்சாம லவருக்காய்ச்
சென்றுறுதி சொன்னான் றினகரா—என்றும்
இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாந் தூது. 72

மன்னரைச்சேர்ந்தொழுகல்

மன்ன ரெவர்க்கும் வயதுமுறை தேவையில்லைத்
தென்னவதி காரி தினகரா—தன்னின்
இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற
வொளியோ டொழுகப் படும். 73

குறிப்பறிதல்

கண்பார்வை யாற்குறிப்பைக் காணவெளி தோபுணரித்
திண்பார் புரக்குந் தினகரா—பண்பால்
அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டு முகம். 74

அவையறிதல்

சுந்தரனின் பேரவையுட் சொன்னாற் கருந்தமிழுஞ்
செந்தமிழாங் கோவைத் தினகரா—முந்தைநூல்
கற்றறிந்தார் கல்வி விளக்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து. 75

அவையஞ்சாமை

ஆனை குதிரைகா லாட்படைக ளால்மிகுந்த
சேனை வளைந்[2] தானுந் தினகரா—ஏனைப்
பகையகத்துச் சாவா ரெளிய ரரிய
ரவையகத் தஞ்சா தவர். 76

(பாடம்) 1 தேயொன்றைத். 2 சேனைவளைத்.

நாடு

தையலார் நாடகஞ்செய் சாலேகளுஞ் சோலேகளுஞ்
செய்யுமுறுப் பல்ல தினகரா—துய்ய
இருபுனலும் வாய்ந்த மலேயும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு. 77

அரண்

ஆரற் சுவர்க ளரணுமோ அவ்வளவர்
சேரர்க் கிணேயாந் தினகரா—வாரி
மணிநீரு மண்ணு மலேயு மணிநிழற்
காடு முடைய தரண். 78

பொருள்செயல்வகை

காடுமலே நாடுங் கடலோடி யும்பொருளேத்
தேடவே வேண்டுந் தினகரா—நாடுங்கால்
இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு. 79

படைமாட்சி

வெல்படையைக் கண்டால் மிகவும் பயந்தோடிச்
செல்படையு முண்டோ[1] தினகரா—சொல்வலிய
கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கு
மாற்ற லதுவே படை. 80

படைச்செருக்கு

ஈனர் கொடைத்தமிழி லெள்ளார் கொடாத்தமிழ்செந்
தேனனேய நன்மை தினகரா—ஆனதொரு
கான முயலெய்த வம்பினில் யானே
பிழைத்தவே லேந்த லினிது. 81

நட்பு

உண்மையறி கண்ணுைப் புடையாரைக் கண்டவுடன்
றிண்மைநட்புக் கொண்டாய் தினகரா—உண்மை
புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா
னட்பாங் கிழமை தரும். 82

(பாடம்) [1] மொன்றே.

இட்டமாய் வந்தார்க் கிடுக்கணு ளுலவரைத்
தெட்டவொண் ணாது தினகரா—உற்றதுகேள்
உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதா நட்பு. 83

நட்பாராய்தல்

உத்தமர்கள் சூழ்மாவை யுத்தண்ட னுள்ளமுமுன்
சித்தமும்போற் கோவைத் தினகரா—ஒத்தாற்
குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு. 84

பழைமை

எப்பொழுதுந் தம்பனத்துக் கேற்கநடப் பார்க்கொருசெய்
திப்பிழைவா ராதோ தினகரா—அப்பொழுது
பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின். 85

தீநட்பு

கோதென் றகற்றுங் குணமில்லா நட்பினரைத்
தீதென் றகற்றுந் தினகரா—யாதொன்
றுறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது
கொள்வாருங் கள்வரு நேர். 86

கூடாநட்பு

மாறுகொண்ட வொன்னார் வணங்கிலவ ரைப்பெரியோர்
தேறுவது செப்பார் தினகரா—வேறு
தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னா
ரழுதகண் ணீரு மனைத்து. 87

பேதைமை

ஓதியுடன் கற்று முலகத்தோ டொத்தொழுகார்
தீதகலார் கோவைத் தினகரா—ஆதலினால்
ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையாரில். 88

புல்லறிவாண்மை

எம்மையுனைப் போலறிவா னிந்தகொடை யேகொடையாஞ்
செம்மைபெற வாழுந் தினகரா—சும்மா[1]
அறிவிலா னெஞ்சுவந் தீதல் பிறிதியாது
மில்லை பெறுவான் றவம். 89

இகல்

ஓரவே மாறுபா டொண்ணுது வந்தாலுந்
தீரவே வேண்டுந் தினகரா—கூரும்
இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர். 90

பகைமாட்சி

நால்வகையு மில்லாரை நாடாள வொட்டுவரோ
சேலுகளுங் கோவைத் தினகரா— நூல்வாய்
வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றூர்க் கினிது. 91

பகைத்திறந்தெரிதல்

வேற்றுப் பொருள்குறிக்க வேண்டாம் சமர்க்களத்திற்
சேற்றுக் கமலந் தினகரா—மாற்றிப்
பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
றகைமைக்கட் டங்கிற் றுலகு. 92

உட்பகை

எப்பொழுது மொன்று யிருப்பவர்போ லேமறைத்துச்
செப்பமுடன் வாழ்வார் தினகரா—அப்பொழுதுஞ்
செப்பின் புணர்ச்சிபோற் கூடினுங் கூடாதே
யுட்பகை யுற்ற குடி. 93

பெரியாரைப்பிழையாமை

எஞ்சலிலா வாழ்வு மிராவணனும் போனதொரு
செஞ்சிலையா லன்றே தினகரா—மிஞ்சு
வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு மென்னுந்
தகைமாண்ட தக்கார் செறின். 94

(பாடம்) [1] தம்மால்.

பெண்வழிச்சேறல்

பெண்புத்தி கேட்குமவர் பேயர்காண் மன்னவர்க்குத்
திண்புத்தி கூறுந் தினகரா—நண்புற்றுப்
பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையி னுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து. 95

வரைவின்மகளிர்

ஆரத் தழுவினுமன் பில்லாப் பரத்தையரைச்
சேரத் தகுமோ தினகரா—தேரிற்
பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையி
லேதில் பிணந்தழீஇ யற்று. 96

கள்ளுண்ணுமை

வண்டு மதுவுண மாந்தரு மொவ்வாதோ
திண்டிறல்சேர் வீமா தினகரா—உண்டு
களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று. 97

சூது

மாபா ரதத்தின் வரலா றறிந்துசிவன்
சீர்பாதம் போற்றுந் தினகரா—ஆபாதர்
ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொ
னன்றெய்தி வாழ்வதோ ராறு. 98

மருந்து

பைவாய் மருந்துகொண்டு பண்டிதருண் பற்றலர்க்கென்
செய்வார்தென் கோவைத் தினகரா—மெய்வாய்
இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்குங்
கழிபே ரிரையான்க ணோய், 99

குடிமை

இன்னநல மின்னகுல மின்னமர பென்றிகழுஞ்
சின்னம் பலவேன் தினகரா—முன்னம்
நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல். 100

மானம்

மானுர் துகிலுரிய மன்றிருந்த தென்னவைந்து
சேனு பதியார் தினகரா—ஆனல்
மருந்தோமற் றூனேம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து. 101

பெருமை

உத்தியிரு மெல்லாரு மொக்குமென வொண்ணுதே
சித்தசனே கோவைத் தினகரா—வைத்த
பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வாச்
செய்தொழில் வேற்றுமை யான். 102

சான்ருண்மை

தக்கதொண்டை நன்ளுடு சான்ரோ ருடைத்தெனுஞ்சொல்
திக்கறிய வந்தாய் தினகரா=ஒக்குமே
ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்ருண்மைக்
காழி யெனப்படு வார். 103

பண்புடைமை

ஆசகலு நின்குணத்தை யன்புடனேம் பத்தாறு
தேசமுங்கொண் டாடுந் தினகரா—பேசில்
நயனெடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு முலகு. 104

நன்றியில்செல்வம்

செல்வ மிகப்படைத்துந் தியாகபோ கங்களில்லார்
செல்வமென்ன செல்வந் தினகரா—செல்வங்
கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய
கோடி யுண்டாயினு மில். 105

நாணுடைமை

தக்கார்க் குயிரினுநாண் தக்கதன்ரோ தண்டமிழெண்
டிக்காருங் கோவைத் தினகரா—புக்கோடி
நாணு லுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா
ணுண்டுறவார் நாணுள் பவர். 106

குடிசெயல்வகை

வந்துனையெல் லாரும் வணங்குமது கண்டுசிலர்
சிந்தனைசெய் தென்ன தினகரா—தந்தைசொல்லாற்
குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்று முலகு. 107

உழவு

மைபார்த்த புன்பயிர்க்கும் வான்பயிர்க்கும் போய்ப்பலகாற்
செய்பார்க்க வேண்டுந் தினகரா—மெய்பார்த்துச்
செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்
தில்லாளி னூடி விடும். 108

நல்குரவு

வெல்லுங்காண் செல்வரிட்ட வேடமவர் வார்த்தைவிலை
செல்லுங்காண் கோவைத் தினகரா—சொல்லுங்கால்
நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும், 109

இரவு

இன்றிரப்ப தாகா திரந்தாலு முன்னிடத்திற்
சென்றிரப்ப தேற்றந் தினகரா—ஒன்றை
இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவிலுந் தேற்றாதார் மாட்டு. 110

இரவச்சம்

ஏகினவர்க் கில்லை யெனுஞ்சொலினு மின்னாதே
தேகியென்னுஞ் சொல்லுந் தினகரா—தாகமுறும்
ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில். 111

கயமை

ஓயாப் பரிவு மூபசார முங்கொடையும்
தீயார்க்கொன் றூது தினகரா—வாயாரச்
சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ். 112

பொருட்பால் முற்றும்

3. காமத்துப்பால்

தகையணங்குறுத்தல்

வேலா சிவயோகி வீரயன்பா[1] லாதரும
சீலாதென் கோவைத் தினகரா—மாலானேன்
பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு. 113

குறிப்பறிதல்

சூதாம் பருவத் துணைமுலையா ராடவர்க்குச்
சேதாம்பல் விள்ளார் தினகரா—வேதாகக்
கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்க
ளென்ன பயனு மில. 114

புணர்ச்சிமகிழ்தல்

வானுலகில் மண்ணுலகில் மற்றொன்றிற் கண்டதுண்டோ
தேனுவென வீசுந் தினகரா—மானிடர்
கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள. 115

நலம்புனைந்துரைத்தல்

மங்கையர்கள் செய்ய வதனந் தனக்கிணையாய்த்
திங்களையேன் சொல்வார் தினகரா—கங்குல்
அறுவாய் நிறைந்த வவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து. 116

காதற்சிறப்புரைத்தல்

இன்னமணி வேண்டா வெனவொறுத்த வுண்கணாள்
தென்னவு தார தினகரா—மன்னிய
பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர். 117

(பாடம்) [1] வீரியன்பா.

நாணுத்துறவுரைத்தல்

நாகரா சன்புகழும் நன்னுகரீக(வ)ர
சீகருணு கோவைத் தினகரா—ஓகோ
கடலன்ன காம முழந்து மடலேருப்
பெண்ணிற் பெருந்தக்க தில். 118

அலரறிவுறுத்தல்

தாரார் கமலத் தடம்புயத்தி லின்றெனைநீ
சேரா திருக்கிற் றினகரா—பேராத
ஊரவர் கவ்வை யெருவாக வன்னைசொல்
நீராக நீளுமிந் நோய். 119

பிரிவாற்ருமை

தற்பரனை யாறு சமயத்தை யுங்கடந்த
சிற்பரனைப் போற்றுந் தினகரா—எற்பிரிந்து
செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை. 120

படர்மெலிந்திரங்கல்

மின்னுர் நகைக்கமத வேள்பகைக்க நாளொருத்தி
தென்னு வலரெண் டினகரா—உன்னுலே
காமக் கடும்புன லீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே யுளேன். 121

கண்விதுப்பழிதல்

போதளவுஞ் சங்கப் புதுமுத்தின் சங்கவதி
சீதளசெந் தாமத் தினகரா—நீதழுவ
வாராக்காற் றுஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
யாரஞ ருற்றன கண். 122

பசப்புறுபருவரல்

தாயிழைக்குஞ் சொல்லாற் றளர்ந்துனது மாலைபெருச்
சேயிழைக்கு வேருர் தினகரா—தூய
விளக்கற் றம்பார்க்கு மிருளேபோற் கொண்கன்
முயக்கற் றம்பார்க்கும் பசப்பு. 123

தனிப்படர்மிகுதி

உத்தசெயத் தியாகியென்ப ருன்னைப்புன் மாலையிலிச்
சித்துத் தளர்ந்தாள் தினகரா—பத்தில்
ஒருதலையா னின்னுது காமங்காப் போல
விருதலை யானு மினிது. 124

நினைந்தவர்புலம்பல்

எங்கிருந்து முன்னைவிடா தேங்னைப்போ மிப்புவிமேற்
செங்கை முகிலே தினகரா—மங்கையருக்
குள்ளினுந் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினுங் காம மினிது. 125

கனவுநிலையுரைத்தல்

நேர்ந்த கனவிலெம்மை நேற்றிரவு வந்துநீ
சேர்ந்தறியாய் கோவைத் தினகரா—போந்து
நனவினு னல்கா தவரைக் கனவினுற்
காண்டலி னுண்டென் னுயிர். 126

பொழுதுகண்டிரங்கல்

உன்பவனி காட்டுமா லொன்று பெறுகோவைத்
தென்பவனி காட்டுந் தினகரா—என்போல்வார்
காலைக்குச் செய்தநன் றென்கொ லெவன்கொல் யான்
மாலைக்குச் செய்த பகை. 127

உறுப்புநலனழிதல்

கொங்கேறு தண்களபக் குன்றையச்சு தேந்திரன்றன்
செங்கோல் செலுத்துந் தினகரா—இங்கே
பணைநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள். 128

நெஞ்சொடுகிளத்தல்

மன்றலமர் சோலை மறுகு தமிழ்மணக்குந்
தென்றலமர் கோவைத் தினகரா—என்றே
இருந்துள்ளி யென்பரித னெஞ்சே பரிந்துள்ளல்
பைதனோய் செய்தார்க ணில். 129

நிறையழிதல்

என்றுமுனேக் கூடேமென் றிட்ட விரதமுட்டச்
சென்றதில்லே யன்ருே தினகரா—நின்று
நிணந்தியி லிட்டன்ன நெஞ்சினுர்க் குண்டோ
புணர்ந்தாடி நிற்பே மெனல், 130

அவர்வயின் விதும்பல்

எங்களுரை கேளா யிரங்கா யினிநாளேச்
செங்கமல மாலேத்[1] தினகரா—மங்கை
பெறினென்னும் பெற்றக்கா லென்ஞ முறினென்னும்
உள்ள முடைந்துக்கக் கால். 131

குறிப்பறிவுறுத்தல்

தேர்த்திருநாள் பூசைத் திருப்பணிநீ கண்டபின்னேத்
திர்த்தமுள்ள கோவைத் தினகரா—பார்த்தால்
மணியிற் றிகழ்தரு நூல்போன் மடந்தை
யணியிற் றிகழ்வதொன் றுண்டு. 132

புணர்ச்சிவிதும்பல்

இந்நிலங்க ளெங்கு மிடர்நீக்க வெங்களுக்காய்த்
தென்னிலங்கை வென்ருய் தினகரா—உன்னேயெதிர்
காணுங்காற் காணேன் றவருய காணுக்காற்
காணேன் றவறல் லவை. 133

நெஞ்சொடு புலத்தல்

வந்தநெஞ்சை மீள வரவிட வொண்ணுதோ
செந்தமிழ்சேர் கோவைத் தினகரா—பைந்தொடியார்
துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சந் துணேயல் வழி. 134

புலவி

நேர்கண்டா யூட னிலவுகண்டாய் மன்மதனுர்
தேர்கண்டாய் கோவைத் தினகரா—சேர்கண்டாய்
உப்பமைந் தற்ருற் புலவி யதுசிறிது
மிக்கற்ரு னிள விடல். 135

(பாடம்) [1] செங்கை முகிலே.

புலவிநுணுக்கம்

பாருலா வுங்கண் படைத்தமின்னுர் வீதியெல்லாஞ்
சீருலா வந்தாய் தினகரா—ஊரிலுள்ள
பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு. 136

ஊடலுவகை

வெம்மனத்தி லூடல் விளைத்துடனே கூடிமதன்
செம்மனம்போல் வாழி தினகரா—தம்மனத்தால்
ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின். 137

காமத்துப்பால் முற்றும்.

தினகர வெண்பா
முற்றிற்று.

———

குறிப்புரை

1 காப்பு புன்சொல் - பொருட்செறிவில்லாத எளிய சொல். தினகரன் - தொண்டை நாட்டைச் சார்ந்த குன்றத்தூருக்கு அண்மையிலுள்ள கோவூரின்கண் தோன்றிய அமைச்சராவர். இவர் அச்சுதேந்திரன் என்னும் மன்னன்பால் அமைச்சுப் பூண்டிருந்தனர். இவர்தம் தந்தையார் பெயர் வீரையர். இவர் கருணீகர் குலத்தினர். சைவச் செந்நெறியினர். இவரே பாட்டுடைத் தலைவர். இங்கிதம் - இனிமை.

2 உமாபதி - உமையம்மையார் கொழுநன். சிவ பெருமான். சித்தர் - மனமுடையவர்.

3 முகில் - மேகம். தோற்றவர் மண்ணைக் கவ்வுவது போல் புல்லைக் கவ்வுவதும் வழக்கு. ஒன்னார் - ஒன்றுகாதார்; பகைவர்.

4 கெடி - வல்லமை. திக்கு - திசை.

7 பெண்ணச்சு - தனக்குரித்தல்லாத அயற் பெண்களை விரும்புதல்.

9 போனகம் - தானுழைத்து உண்ணும் ஊண்.

10 ஆழிமண்டலம் - கடல்சூழ்ந்த உலகம். செவ்வாழி- ஆணைச்சக்கரம்,

12 கொய்யுளை - பிடரி மயிரையுடைய குதிரை. வேழம் – யானை.

13 புந்தி - புத்தி. சிந்தை - மனம்.

14 மின்னார் - மின்போலும் பெண்கள். இடை- இடுப்பு

16 சீகருணா - சிறந்த கருணீகர் குலத்துத் தலைவனே, கோவை - தொண்டை மண்டலத்துள்ள கோவூர்.

17 நொய்து - சிறுமை. வாசவன் - இந்திரன்.

18 வயிரம் - மனத்தைவிட்டகலாத பகைமை.

19 மாசு - மனக்குற்றம்.

20 பரத்தையர் : பொதுமகளிர்.

21 ஏதிலார் - அயலவர்; பகைவர்.

24 சற்காரம் – உதவி.

25 தியாகம் : கொடை.

27 செல்விக்க - செல்வமுண்டாக.

29 தாமாய்வதையாமல் - தாமாகக் கொல்லாமல்.

31 சிமிழ் - செப்பு.

32 தெள்ளி - தெளித்து. புனையும் : அழகுறப் பாடும்.

33 விப்பிரர் - அந்தணர்; பார்ப்பார். குரவர்-தந்தை. தாய், குரு.

36 பசுப்படுத்து - பசுவை (வேள்வியில்) கொன்று.

37 தேசு - புகழ்

38 நரை - வெண்மை, மயிர் நரைத்தல்.

40 பேதையர் - அறிவிலார்:

41 ஒள்ளியர் - அறிவான்மிக்கோர்.

44 உஞற்றும் - முயலும். சிற்றறிவு - பொல்லாங்கு பயக்குமறிவு.

47 குழக்கன்று - இளங்கன்று, குலக்கன்று - மனுநீதி கண்ட சோழன்மகன்.

51 பதறி - கலங்கி.

55 ஏற்பதல்ல - பொருந்துவதன்று.

56 அண்டை : பக்கம்.

57 செய்கருமம் – செய்யவேண்டிய கடமைகள்.

58 கசடர்

63 அற்பம் - தாழ்வு.

64 மடி - சோம்பல்.

65 அய்யிருநூறு - ஆயிரம், அய்யிரு – ஐந்திரண்டு, பத்து.

67 குலமந்திரி - (இப்பாட்டுடைத் தலைவன்) சிறந்த மந்திரி. கோவை – (அவன் பிறந்த) கோவூர்.

68 நித்தத்துவம் - அழியாமை. கும்பகன்னன்: இராவணன் தம்பி,

70 வீடணன் - இராவணனின் மற்றொரு தம்பி.

75 கருந்தமிழ் - சிறப்பில்லாத தமிழ்.

78 ஆரல் - சுவர்மேலமைக்கப்படும் மறைப்பு.

83 தெட்ட - தெளிய.

84 மாவை - ஓரூர். உத்தண்டன் - அவ்வூரிலுள்ள சிறந்த வள்ளல்.

87 தேறுவது - தெளிவது.

90 ஓரவே : ஒருதலையாக,

92 சமர்க்களம் – போர்முனை.

94 சிலை - வில்.

96 பரத்தையர் - பொது மகளிர்.

99 பண்டிதர் - மருத்துவர்

100 சின்னம் - அடையாளம், குறி.

101 மானார் : மான்போலும் துரோபதை. துகில் - ஆடை. மன்று – துரியோதனன் அவை. ஐந்து - பாண்டவரைவர்.

102 சித்தசன் மன்மதன் - மன்மதன் போன்ற அழகுள்ளவன்.

104 ஆசு - குற்றம்.

105 தியாக போகம் - கொடையும், நுகர்வும்.

107 மை : மேகம், மழை. புன்பயிர் - புஞ்சைக்கூலம். வான்பயிர் : நன்செய்க் கூலம். கூலம் - தானியம்.

111 தேகி – ஈ என இரத்தற் குறிப்பு.

114 சூது - சொக்கட்டான் காய்,

116 திங்கள் - சந்திரன்.

118 நாகராசன் . இந்நூலாசிரியரின் பெயராகலாம்.

120 சிற்பரன் - முற்றுணர்வுடைய சிவபெருமான்.

127 பவனி - உலாவருதல்.

128 கொங்கு - மணம். அச்சுதேந்திரன்-பாட்டுடைத் தலைவனாகிய அமைச்சன் தினகரனுக்குரிய மன்னன்.

129 மன்றல் - மணம்.

133 இடர் - துன்பம்.

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

[எண்: செய்யுளெண்]

அய்யிருநூ றுண்டு 65
அன்றெதிரி செய்த 72
ஆசகலு நின்குணத் 104
ஆடுபல தேடலா 48
ஆரத் தழுவினுமன் 96
ஆரற் சுவர்க்க 78
ஆரா ருறவாகா 34
ஆரூர்க் குழக்கன்று 47
ஆரே வெறுப்பவ 38
ஆர்க்கும் பொறுமை 18
ஆவ தறியா 60
ஆவலுடன் ஓடி 23
ஆனகுல மந்திரி 67
ஆனை குதிரைகா 76
இட்டமாய் வந்தார்க் 83
இந்நிலங்க ளெங்கு 133
இப்புவிமேற் பெண்ணை 7
இவ்வாழி மண்டலத்தன் 10
இன்றிரப்ப தாகா 110
இன்னநல மின்னகுல 100
இன்னமனி வேண்டா 117
இன்னா ரினியா 24
ஈதலுமின் சொல் 50
ஈன்ர் கொடை 81
ஈன்றாள் பசிகொண் 69
உண்மையறி கண் 82
உத்தசெயத் தியாகி 124
உத்தமநூல் கற்று 2
உத்தமர்கள் சூழ் 84
உத்தியினா லெல்லாரு 102
உய்யு மனமடிக்க 64
உன்பவனி காட்டுமா 127
ஊரார்க்குச் சோறிடுவ 56
எங் களூரை கேளா 131
எங்கிருந்து முன்னை 125
எஞ்சலிலா வாழ்வு 94
எண்ணு மெழுத்து 43
எந்த நெடுஞ் 57
எப்பொழுதுந் தம் 85
எப்பொழுது மொன்று 93
எம்மையுனைப் போலறி 89
எய்தரிய புண்ணியவா 49
எய்துசிவ பூசை 36
என்போ டுருகுதவ 6
என்றுமுகி லைத்தொழு 3
என்றுமுனைக் கூடே 130
ஏகினவர்க் கில்லை 111
ஏதிலார் பொல்லாங் 21
ஏந்துமுலை மின்னார்க் 14
ஏற்பதல்ல வேகுருவி 55
ஒப்போ டொழுகா 31
ஒன்று தனக்கு 61
ஒன்று மறியா 41
ஓதி யறியுமறி 46
ஓதியுடன் கற்று 88
ஓயாப் பரிவு 112
ஓரவே மாறுபா 90
ஓரிடத்தி லாற்ற 53
ஒரு முலகிடுக்க 66
ஓர்ந்துணர்ந்து கொண்டு 22
கண்பார்வை யாற்குறி 74
கல்லாரு நல்லாரே 44
கல்விக் கடல்கடந்து 27
கள்ளரையுங் கொல்லு 58
கள்ளர்க்குற் றுண்டோ 32
கற்றிலனே யாயினும் 45
காடுமலை நாடு 79
காலங் கருதிக் 52

குற்றமிகச் செய்தாரை 35
கையாற் பரிந்தழை 26
கொங்கேறு தண் 128
கொய்யுளேவே ழம் 12
கோதென் றகற்று 86
சுந்தரநின் பேரவை 75
சுபமாதா ஞென்றை 71
சூதாம் பருவத் 114
செல்வமிகப் படைத்து 105
சைவநிலை நின்றுஞ் 39
தக்கதொண்டை நன்ஞு 103
தக்கார்க் குயிரினு 106
தக்கெடி மன்னவர் 4
தப்பாமல் விடணற்குத் 70
தற்பரனை யாறு 120
தாமதத்தி லன்றிநினைந் 30
தாயிலழுக்குஞ் சொல்
தாரார் கமலத் 119
தையலார் நாடகஞ் 77
தேர்த்திரு நாள் பூசை 132
நல ஞுணமு 11
நல்வசனஞ் சொல்வி 15
நாகரா சன்புகழும் 118
நாகரிக ராஞுலென் 16
நால்வகையு மில்லாரை 91
நாஞுசை கொண்டிருக்க 20
நித்தத்து வங்கேடக 68
நிர்திசகு மற்ப 63
நோசண்டா யூட 135
நேர்ந்த கலவி 126
நொய்து கொண்டு வாச 17
பாருலா வுங்கண் 136
புத்திரரோ டுண்ணுத 9
புந்திசெய்ய நன்மையே 13
பூசைமுடித் துண்டு 37
பெண்புத்தி கேட்கு மவர் 95
பேதையாகு மோகம் 40
பைவாய் மருந்து 99
போதளவுஞ் சங்க 122
மங்கையர்கள் செய்ய 116
மன்றலமர் சோலை 129
மன்ன ரெவர்க்கு 73
மன்னர்க்குச் சீமை 42
மன்ஞுயிரைத் தாமாய் 29
மாசுடையார் வாழ்வு 19
மாபா ரதத்தின் 98
மாறுகொண்ட வொன் 87
மாஞர் துகிலுரிய 101
மானிடர்க்கு ஞுன்போல் 25
மின்ஞர் நகைக்க 121
முன்பாதி புன்சொல் 1
மெய்யுலகி லொன்றை 51
மெய்யுரைநீ பெற்ருய் 8
மைவார்த்த புன்பயிர்க் 108
யார்யார்க்கு நற்குணமு 54
வண்டு மது வுண 97
வந்தநெஞ்சை மீள 134
துனை யெல்லாரும் 107
படினர்க்குச் சற்று 28
வாஞுலகில் மண்ஞுல 115
விடபிரர்தெய் வங்குரவ 33
வெம்மனத்தி லூடல் 137
வெய்யகொடு வேந்த 59
வெல்படையைக் கண் 80
வெல்லுங்காண் செல்வ 109
வெல்லுமுடி மன்னவற்கு 62
வேலா சிவயோகி 113
வேற்றுப் பொருள் 92
வையகத்தில் வாழு 5

கழக வெளியீடு ௧௨௯௪

பதிப்பாளர் :

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட்.,
1/140, பிராட்வே, சென்னை – 1.

தலைமை நிலையம்

98, கீழைத் தேர்த்தெரு, திருநெல்வேலி–6.

அப்பர் அச்சகம், சென்னை - 1